# இலங்கை ஜனாதிபதித் தேர்தல்களும் வாக்களிக்கப்பட்ட முறையும்

## 1994 நவம்பர் 09

*தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆர் பிரேமதாச அரசுக்குமான தேன்நிலவு முடிந்து பிரேமதாஸ தற்கொலைக் குண்டுக்குப் பலியானார். சந்திரிகா குமாரதுங்க சமாதானத்தின் பெயரில் தேர்தலில் நின்றார். தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் காமினி திசாநாயக்க 1994 அக்டோபர் 23ம் கொழும்பு நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் கொலை செய்யப்பட்டார். காமினி திஸ்ஸநாயக்காவுக்குப் பதிலாக அவருடைய மனைவி ஸ்ரீமதி திஸ்ஸநாயக்க போட்டியிட்டார். சந்திரிகா குமாரதுங்க சமாதானத்தின் பெயரில் வெற்றிபெற்றார். தமிழர் விடுதலைக் கூட்டணி சந்திரிகா குமாரதுங்கவிற்கு தனது ஆதரவினை வழங்கி ,ருந்தது. தேர்தல் முடிவடைந்ததும் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆன-ாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் டோராப் படகுகளைத் தாக்கி யுத்தத்தை ஆரம்பித்தனர். அதனைத் தொடர்ந்து சில மாதங்களுக்குள்ளாகவே யாழ்ப்பாணம் ,லங்கை ,ராணுவத்தின் வசமானது. தமிழீழ விடுதலைப் புலிகள் வன்னியைத் தமது தளமாக்கிக்கொண்டனர்.*

| மாவட்டம் | ஐதேக | சுக | அ. வாக்குகள் | மொ. வாக்குகள் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 223<br>1.27% | 16,934<br>96.35% | 17,716<br>2.97% | 596,366 |
| வன்னி | 4,493<br>11.41% | 33,585<br>85.30% | 40,053<br>22.41% | 178,697 |
| மட்டக்களப்பு | 14,812<br>8.93% | 144,725<br>87.30% | 168,443<br>64.32% | 261,898 |
| திகாமடுல்ல | 59,074<br>25.40% | 168,289<br>72.36% | 236,202<br>75.70% | 312,006 |
| திருகோணமலை | 28,006<br>25.74% | 77,943<br>71.62% | 110,547<br>60.05% | 184,090 |
| இலங்கை முழுவதும் | 2,715,283<br>35.91% | 4,709,205<br>62.28% | 7,713,232<br>70.47% | 10,945,065 |